**செ. கு. எண்**: 233 **நாள்**:29.06.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.6.2012

திருநெல்வேலி மாநகர குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறையில் காவல் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.V.S. ரகுநாதன் அவர்கள் 26.6.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

திரு. ரகுநாதன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பால் காலமான காவல் ஆய்வாளர் திரு. M.V.S.ரகுநாதன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**